உ
சிவமயம்
சண்முகநாதன் துணை

சிவாகம நெறித் திருமண முறை

*

தொகுப்பு
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
பாலகவி
தேவகோட்டை

*

வள்ளியம்மை – கோவிந்தன் B. Com.
திருமண வெளியீடு
பராபவ பங்குனி 16
30-3-67

உ
சிவமயம்
சண்முகநாதன் துணை

சிவாகம நெறித் திருமண முறை

*

தொகுப்பு
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
பாலகவி
தேவகோட்டை

*

வள்ளியம்மை – கோவிந்தன் B. Com.
திருமண வெளியீடு
பராபவ பங்குனி 16
30-3-67

7/1/2

உ
சிவமயம்
சண்முகநாதன் துணை.

பதிப்புரை

பரம கருணாநிதியாகிய சிவபெருமான் இந்நிலவுலகத்தில் வாழும் மக்கட் பிறப்பினராகிய நமது இம்மை மறுமை வாழ்வுகள் இனிது நடைபெறும் பொருட்டுத் தமது அருள்நாத ஒலியிலிருந்து வேத சிவாகமங்களாகிய முதல் நூல்களை அருளிச் செய்திருக்கின்றார். வேதம் உலக மக்கள் பொருட்டுப் பொதுவாகவும், சிவாகமம் அவர்களுள் பக்குவம் பெற்றோர் பொருட்டுச் சிறப்பாகவும் வழங்கப் பெற்றவை. சிவாகம நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்குப் பல பிறப்புக்களிற் செய்த சிவபுண்ணியமே காரணமாயிருக்கும். சிவாகமங்களில் விதிக்கப்பெற்ற கிரியைகள் அனைத்தும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தமானவை. அக்கிரியையை ஞான

பாதப் பொருளுண்மை அறிந்த ஆசாரியர்கள் செய்வதால் எளிதாகவும், விரைவிலும் பயன் கைகூடும் என்பது உறுதி.

ஞானனுபவம் மிக்க சோம சம்பு சிவாசாரியர் முதலிய அருளாசிரியர்கள் நம்மிடம் கொண்ட பேரன்பினுல் சிவாகமங்களின் கிரியாபாதக் குறிப்புக்களைத் தொகுத்தெடுத்துப் "பத்ததிகள்" என்ற பெயரால் நமக்கு உதவியிருக்கிருர்கள். அவைகள் இறைவனைக் குறித்துச் செய்வனவும், மக்களைக் குறித்துச் செய்வனவும் ஆகிய இரண்டு வகைக் கிரியைகளை வரம்புபடுத்திக் கூறுகின்றன.

•

திருமணம் என்பது முற்பிறவித் தொடர்பு பற்றி நிகழ்வதென்பதை நம்நாட்டிற் பெரும்பாலான சமயங்கள் உடன்படுகின்றன. திருமண முறை, சிவாகம நெறிப்படி பத்ததிகளில் முறையாகக் கூறப் பெற்றி

ருக்கின்றது. சைவ மரபிலே தோன்றிய அனை வரும் சிவாகம நெறியைக் கடைப்பிடிக்கும் உரிமையும், கடமையும் உடையவர்கள்.

என் புதல்வி திருவளர்செல்வி வள்ளியம் மைக்கும், பள்ளத்தூர் திரு. சொ.மு ராம. சோலையப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் நிறைநாட் செல்வன் கோவிந்தன் B. Com.க் கும் இன்று நடைபெறுகிற திருமணம் சிவாகம நெறியில் நிகழ்கின்றது. இந்த முறையைத் தொகுத்தெழுதி அச் சிட்டு நூல்வடிவில் வெளியிட வேண்டு மென்று விரும்பினேன். என் விருப்பத்தை ஏற்று இதனை எழுதித் தந்தவர்கள் இதற் குரிய எல்லாத் தகுதிகளும் படைத்தவர் களும் என் ஞானாசிரியர் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளிடம் மூவகைத் தீக்ஷை களையும், ஆசாரிய அபிஷேகத்தையும் பெற்று ஞானதானப் பேருதவி செய்து வருகின்றவர் களும் ஆகிய தேவகோட்டை சிவஸ்ரீ தத்

புருஷ தேசிகர் (பாலகவி) அவர்கள் ஆவார்கள், அவர்களுக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

முற்செய் தவத்தால் சைவர்களாகப் பிறந்திருக்கிற அனைவரும் திருமணம் முதலிய உடம்பு பற்றிய நிகழ்ச்சிகளிலும் தீக்ஷை முதலிய உயிர்பற்றிய நிகழ்ச்சிகளிலும், சிவாகம நெறியைக் கடைப்பிடித்து உரிய பயனைப் பெற வேண்டுமென்று என் ஆன்ம நாயகராகிய ஸ்ரீபாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தியநாதப் பெருமான் திருவடிகளை வாழ்த்தி வணங்குகிறேன்

'தமிழகம்'
பலவான்குடி.
30–3–67

அன்புள்ள,
குமர.சு. சுப்பிரமணியன்.

உ
சிவமயம்
சண்முகநாதன் துணை

சிவாகம நெறித் திருமண முறை

ஆசாரிய அபிஷேகம் பெற்றுக் கொண்ட சிவாசாரியர்களேனும், சைவாசாரியர்களேனும் ஆசாரியராக இருத்தல் வேண்டும்.

ஆசாரியர் ஆசமன சகளீகரண பிராணாயாமங்கள் செய்து சாமான்ய அர்க்யம் வைத்துக்கொண்டு விக்நேஸ்வர பூஜை, புண்யாஹவாசனம் செய்க.

புண்யாஹவாசனம்

ஆசாரியர் வடக்கு நோக்கியிருந்து நாற்கோண மண்டலம் செய்து அதன்மேல் நெல்லும், அதன்மேல் அரிசியும், அதன்மேல் எள்ளும் இட்டு, அதன் நடுவில் தாமரையிதழ்

அமைத்து, லெட்சுமியைப் பூஜித்துக் கிழக்கு முகமாகக் கலசஸ்தாபனம் செய்து, அதனடியில் ஓம் ஹாம் ப்ரம்மணே நம: மத்தியில் ஓம் ஹாம் விஷ்ணவே நம: உச்சியில் ஓம் ஹாம் ருத்ராய நம: தெற்கில் ஓம் ஹாம் நந்திநே நம: வடக்கில் ஓம்ஹாம் மஹாகாளாய நம, என்று அர்ச்சித்துக் கும்பத்தில் கங்கை, யமுனே, நர்மதை, சிந்து, சரஸ்வதி, கோதாவரி, காவேரி, தாம்ரவர்ணியைஆவாகனுதிகள் செய்து பூஜித்து, மூலமந்திரத்தை 108 முறையும், சம்ஹிதா மந்திரங்களை ஒரு முறையும், ஓம் ஹ்ரீம் புர புர ப்ரஸ்புர ப்ரஸ்புர கோர கோர தனுரூப தனுரூப சட சட ப்ரசட ப்ரசட கஹ கஹ வம் வம் பந்த பந்த காதய காதய ஹூம் பட் அகோராஸ்த்ராய நம: என்னும் அகோராஸ்த்ர மந்திரத்தை 10 முறையும் ஜபித்து ஓம் ஹாம் சிவாய தேவதேவாய மஹாதேவாய பாமினே ருத்ராய ஸ்தாணவே நித்யம் ஹராய உக்ராயதே நம:

பரமேஸாய ஸித்தாய ஸர்வஸித்தி ப்ரதாயினே, த்ரியம்பக மஹேசாய அதி ஸாந்தாயதே நம, என்னும் மந்திரங்களால் அபிமந்திரித்து, ரக்ஷாவகுண்டன தேனு முத்திரை தூபதீபங் கொடுத்து, அகோராஸ்த்ர மந்திரத்தால் மண்டபத்திலும் திரவியங்களிலும் புரோக்ஷிக்க.

நாந்தி சோபனம்

நாந்தி முகர்களான ப்ர பிதாமகர், பிதா மகர், பிதா ஸ்தானங்களில், சிவப்பிராம்மணர்கள் மூவரைக் கிழக்கு அல்லது வடக்கு முகமாக வைத்து, அவர்களைக் கணேச ஸ்வரூப ப்ரபிதா மஹர், சண்ட ஸ்வரூப பிதாமகர், ஸ்கந்த ஸ்வரூப பிதுர்க்களாகப் பாவித்து, ஆவாஹனாதிகள் செய்து பூஜித்து, அரிசி முதலியவைகளுடனே ஹிரண்ய ரூபமாகவோ கொடுத்துத் திருப்தி செய்விக்க.

அங்குரார்ப்பணம்

பாலிகைகளை எரு முட்டகத்தூள் அல்லது மண்ணால் நிரப்பி, ஸவகர்த்தர், விவஸ்மான், மார்த்தாண்டர், பாஸ்கரர், ரவி, லோகப்ரகாசர், லோக சாக்ஷி, த்ரி விக்கிரமர், சூர்யர், ஆதித்யர், அம்சுமாலி, திவாகரர் ஆகியோரைப் பூஜிக்க. வலதுபக்கத்தில் க்ருத்திகாதேவி இடது பக்கத்தில் ரோகிணி தேவியுடன் கூடிய சோமனை ஓம் ரம் வம் யம் ஸம் க்ஷ்ரீம் பம் ஸ்ரீம் அம்ர் தேஸ்வராய நம: என்று அர்ச்சித்துப் பூஜிக்க.

பாத்திரத்தில் பால் வைத்து ஓம் ஹ்ரீம் சக்த்யை நம: என்று பூஜித்து, அதில் அங்குரங்களை இட்டு, சதுஸ் சமஸ்காரம் செய்து, சம்ஹிதையால் பூஜித்துத் தூபதீபம் கொடுத்துப், பாலிகைகளில் சேர்க்க.

ரக்ஷாபந்தனம்

மணமகனுக்குப் பவித்ரம் கொடுத்துத் தம்பாளத்தில் திருநீற்றை வைத்து, அதில் மஞ்சளுடன் கூடிய ரக்ஷா சூத்திரத்தை வைக்க. ஆதார சக்தி முதல் சுத்த மாயா சக்திவரை அர்ச்சிக்க. அங்க மந்திரங்களுடன் சிவத்தை அதில் பூஜித்து, மணமகனின் வலது கையிலும், மணமகளின் இடது கையிலும் வாசுகியைத் தியானித்துச் சூத்திரத்தை நிவர்த்தியாதி கலைகளால் அபிமந்திரித்து, அகோரத்தால் சோதித்துக், கவசத்தால் கையில் கட்டித், த்ரியம்பகத்தால் முடிச்சு இட்டு, ஈசானத்தால் திருநீறு சாத்துக.

கன்னிகாதானம்

சிவமூல மந்திரத்தால் மணமக்களுக்கு மாலை முதலியன கொடுத்து, இருவருடைய கோத்ர நாமங்களைச் சொல்லி, மணமகளின் தந்தையை ''மம மாத்ரு வம்சாநாம், பித்ரு

வம்சாநாம், பித்ருணும், சாஸ்வத, சிவலோக, நித்ய, நிவாச, ஸித்யர்த்தம், சிவாகமோக்த, கன்னிகா தான, சம்பூர்ண, சகல, பலாவாப்த்யர்த்தம், சாலங்க்ருத, கன்னிகா தானுக்ய, மஹாதானம், கரிஷ்யே'' என்று சொல்வித்து, மணமகனது வலது கையில், மணமகளது வலது கையைச் சொர்ணத்துடன் வைத்துத் தாரை வார்த்துக் கொடுக்கச் செய்க.

சிவவேள்வி

குண்டத்திற்கு நிரீட்சணம் முதலிய சம்ஸ்காரங்களைச் செய்து, கலா மந்திரங்களாலும், ஓம் ஹாம் கலாமயாய குண்டாய நம: என்ற மந்திரத்தாலும் குண்டத்தை அர்ச்சித்து, மூலத்தால் திரிசூல வடிவில் வடக்கு நுனியாக மூன்று தர்ப்பைகளையும், கிழக்கு நுனியாக இரண்டு தர்ப்பைகளையும் வைத்து, அக்னியை ஓம் ஹாம் ஹம் ஹாம் வந்நி மூர்த்தயே நம: என்று சமர்ப்பித்து,

சம்ஹார முத்திரையால் அந்த அக்னியை எடுத்து, வைந்தவாக்னியுடனும், ஜாடராக்னியுடனும் சேர்த்து, ஓம் ஹாம் ஹ்ரூம் ஹாம் வந்ஹி சைதந்யாய நம: என்னும் மந்திரத்தால் குண்டத்தில் வைத்துப், பஞ்ச ப்ரம்ம மந்திரங்களால் பூஜித்து வாகீசுவரி வாகீசுவரர்களை அர்ச்சிக்க. மூலத்தால் 5 ஆகுதிகள் கொடுத்து, ஷோடசக் கிரியைகள் அக்னிக் குழந்தைக்குச் சித்திப்பதற்காக ஹ்ருதயத்தால் 16 ஆகுதிகள் செய்து. பாலாக்னியையும் யௌவனுக்னியையும் பூஜித்துக், குண்டத்திற்கு வெளியில், கிழக்கு முதலிய நான்கு திக்குகளிலும் ப்ரும்மா முதல் அநந்தர் வரை நால்வரையும் பூஜிக்க. அக்னியில் சிவத்தைப் பூஜித்துச் சிவ மூலத்தால் 108 ஆகுதியும் சம்ஹிதைகளால் 11 ஆகுதிகளும் கொடுக்க.

திருப்பூட்டுதல்

ஆபரணங்கள், திருமாங்கல்யம் ஆகியவற்றிற்குச் சம்பாத ஹோமம் செய்து "ஓம்

க்ஷ ஓம் உமா மஹேஸ்வராய நம: என்று திரு மாங்கல்யம் தரிக்கச்செய்து, அதன் முடிச்சில் அந்த மந்திரத்தால் திருநீறு சாத்தச் செய்க. மூல மந்திரத்தால் 108 ஆகுதி செய்து, மது வர்க்கம் நிவேதித்துப், பூதபலி கொடுத்து, ஆசமனம் செய்து, ஹ்ருதயத்தால் 108 ஆகுதி கள் செய்க, ஹ்ருதயத்தால் மணமக்களுக்குப், பசுவின் கன்றைத் தெரிசிக்கச்செய்க. மூல மந் திரத்தால் 108 ஆகுதிகள் செய்க. பால் பாத் திரத்தில் புஷ்பங்களை இட்டுப், பெரியோர் களால் மணமக்களுக்குப் பூமணம் இடுவிக்க. அக்னியின் இடது பாகத்தில், அம்மியை வைத்து, அக்ஷதை முதலியவற்றால் அர்ச்சித்து, வாமதேவ மந்திரத்தால் மணமகளின் கையை மணமகன் பிடித்து வரும்படி செய்து, மண மகளின் வலதுகாலை, மணமகன் இரண்டு கைகளாலும் பிடித்து எடுத்துச் சிவகாயத்ரி யால் அம்மியின்மீது வைக்கும்படி செய்க உமா மஹேஸ்வர மந்திரத்தால், மணமக்

களை மும்முறை பொரியிட்டுச், சிவாக்னியை வணங்கச் செய்க. பத மந்திரத்தால் பிராயச் சித்த ஆகுதி செய்து, பூர்ணாகுதி கொடுத்துச் சிவத்தையும், அக்னியையும், உத்வாசனம் செய்து, மணமக்களுக்குப் பஸ்ம ரக்ஷைகள் கொடுக்க. ஓம் ஹாம் அருந்தத்யை நம: என்னும் மந்திரத்தால், மணமகளுக்கு அருந்ததியைத் தெரிசிக்கச் செய்து, அம்மியை ஹ்ருதயத்தால் உத்தாபனம் செய்க.

கைப்பிடித்தல்

பட்டு வஸ்த்ரத்தால் மணமக்களின் கைகளை மூடி மணமகளின் கையை மணமகன் வாமதேவ மந்திரத்தால் பிடித்துக்கொண்டு அரசாணி, சிவாக்னி ஆகியவற்றை வலம் வரும்படி செய்க.

திருமண வேளையில் தேவார திருவாசக மாதிய அருள் மறைகளையும், பார்வதி அம்மையார் திருமணம், மீனாக்ஷி அம்மையார் திருமணம் கூறும் சைவ புராணப் பகுதிகளையும் ஓதச் செய்யலாம்.

நலமே தழைக.

திருச்சிற்றம்பலம்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக் கியாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்

—திருஞான சம்பந்த சுவாமிகள்.

R. D. கூட்டுறவு அச்சகம், காரைக்குடி.